தேவனின் அன்பு ஊழியங்கள்

# மங்கள வார்த்தை

GOD'S LOVE MINISTRIES - Vol - I (ISSUE -6) - மாத இதழ் - டிசம்பர் 2020

## அனுப்பப்பட்ட தூதர்கள்



## இ-பத்திரிகை உள்ளே...


Page Nos.

**மனம் திறந்து சில வார்த்தைகள்...** – 03
(Bro. T.Stephen, Founder - God's Love Ministries)

**இம்மாத மங்கள வார்த்தை: அனுப்பப்பட்ட தூதர்கள்!** – 04
(Bro. T.Stephen, Founder, God's Love Ministries)

**அறுப்பு மிகுதி!** – 10
(Sis. Josephin Stephen - Editor "Mangala Vaarthai")

**பெண்கள் பகுதி: இம்மானுவேல் – தேவன் நம்மோடிருக்கிறார்!** – 16
(Sis. Josephin Stephen - Editor, "Mangala Vaarthai")

**வேத வினா போட்டி** – 19
(Bible Quiz – Sis. Josephin Stephen, Editor, "Mangala Vaarthai")

**ஆண்டவரின் அற்புதங்கள்** – 20
(Testimonies)

**மார்வெல் திருமண தகவல் மையம்** – 23
(Marvel Matrimony)

**சிறுவர்கள் பகுதி: தாழ்மையின் பரிசு!** – 24
(Children's Special) - Sis. Steffy Stephen

**வாலிபர் பகுதி: நீங்கள் ஆண்டவருக்குப் பிரியமானவர்கள்!** – 26
(Youth Special) - Sis. Bavya Deril

**தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்** – 28
(Schedule of TV Ministry)

**எங்கள் சேவைகள்**
(Our Services) – 32

# மனம் திறந்து

## சில வார்த்தைகள்...



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

இந்த பொது முடக்க காலத்தில் (Lockdown) நீங்களும், உங்கள் குடும்பத்தினர் யாவரும் நல்ல சுகபெலத்தோடு இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். கடந்த 11 மாதங்களும் நாம் உபத்திரவத்தின் வழியாக கடந்து வந்தாலும், அந்த உபத்திரவத்தை தாங்கக்கூடிய மனப்பக்குவத்தையும், கிருபைகளையும், பாதுகாப்பையும் ஆண்டவர் நமக்குத் தந்தருளி அற்புதமாய் வழிநடத்தி வந்துள்ளபடியால், டிசம்பர் மாதத்திற்குள் வந்துள்ள நாம் அவருக்கு நன்றிசொல்ல கடமைப் பட்டிருக்கிறோம் (சங்கீதம் 116:12,13). பிறக்கப்போகிற வருடம் எப்படி இருக்குமோ? என்ற அச்சம் உங்களுக்கு இருக்கலாம். "உள்ளங்கை அளவு மேகம்" என் கண்களுக்கு முன்பாக தெரிகிறது. கண்டிப்பாக உங்கள் வாழ்வில் ஆசீர்வாதமான மழை பெய்யும் (எசேக்கியேல் 34:26). அது உங்களுடைய தரித்திரங்களையும், பஞ்சங்களையும், கடன்களையும் நிச்சயமாய் மாற்றும் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை (யாக்கோபு 2:5; 2 கொரி. 8:9). எனவே கிறஸ்து பிறப்பின் பண்டிகையை நாம் சந்தோஷமாக கொண்டாடுவோம். விசுவாசத்தோடு வரப்போகிற புதிய வருடத்தையும் வரவேற்போம்.

**"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசாயா 9:6).**

என்ற வேத வாக்கின்படி, ஆண்டவர் தாமே உங்கள் இல்லங்களில் பிறந்து, உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், நீங்கள் கையிட்டுச் செய்கிற வேலையையும், தொழிலையும், வியாபாரத்தையும் நிறைவாக ஆசீர்வதிக்கும்படி கண்ணீரோடு ஜெபித்துள்ளேன். கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக! ஆமென்.

இந்த பண்டிகை காலங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் என் இதயம் கனிந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்

**T. ஸ்டீபன்**

தேவனின் அன்பு ஊழியங்கள்



இம்மாத மங்கள வார்த்தை

# அனுப்பப்பட்ட தூதர்கள்

சகோ. T.ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர - சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

இந்த பண்டிகை காலங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் என் இதயம் கனிந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**"அனுப்பப்பட்ட தூதர்கள்"** என்ற டிசம்பர் மாத "மங்கள வார்த்தை" மூலமாக, உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மங்கள வார்த்தையை நீங்கள் வாசிக்கும்போதே, உங்கள் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும். தேவ தூதர்களை நீங்கள் உங்கள் வீடுகளில் தரிசிப்பீர்கள். எதிர்பாராத ஆசீர்வாதங்கள் உங்களைத் தேடிவரும்! உங்களைக் காக்கும்படி, தேவன் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். அவர்கள் உங்களை தம் கரங்களில் ஏந்திக்கொண்டு போவார்கள்! (சங்கீதம் 91:11,12). உங்கள் துக்க நாட்கள் யாவும் முடிந்துபோம் (ஏசாயா 60:20).

டிசம்பர் மாதம் இந்த வருடத்தின் கடைசி மாதம். வருடம் முழுவதும் என் பிள்ளைகள் உபத்திரவத்தில் இருந்தாலும், அற்புதமாய் அவர்களை ஆசீர்வதித்து, பாதுகாத்து டிசம்பர் மாதத்திற்குள் கொண்டு வந்திருக்கிறீர். என் பிள்ளைகளுக்கு இந்த டிசம்பர் மாதம் என்ன மங்கள வாக்கு சொல்லுகிறீர்? என்று நான் கேட்டபோது, கர்த்தருடைய ஆவியானவர் சொன்ன வார்த்தை:

**"....இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன் (யாத்திராகமம் 23:20)**

'தூதன்' என்று சொல்லும்போது, 'ஒரு ஏஞ்சலை' குறிக்கிறது. 'தூதனானவர்' என்று சொல்லும்போது அது 'இயேசு கிறிஸ்துவை' குறிக்கிறது. யாக்கோபு தூதனானவரை (ஆண்டவரை) தரிசித்தான். அவன் இருபரிவாரங்களோடு திரும்பி வரும் வேளையில், தன் சகோதரன் ஏசாவை பார்க்க மிகவும் பயந்தான். காரணம், ஏசாவின் சேஷ்ட புத்திரபாகத்தை அபகரித்ததுதான். ஆகவே, யாக்கோபு தன் மனைவி, பிள்ளைகளோடு செல்வதற்கு முன், தன் பணியாட்கள் மூலம், மந்தை மந்தையாக கால்நடைகளை வெகு மதியாக ஏசாவுக்கு அனுப்பினான் (ஆதியாகமம் 32:13-18). அந்த வேளையில் யாக்கோபு தன்

மனைவிகளையும், பிள்ளைகளையும் உடன் அழைத்துக்கொண்டு யாப்போக்கு என்ற நதியை கடக்கச் செய்தான். பின்னர் அவன் தனித்திருந்தபோது, ஒரு புருஷன் விடியும்வரை போராடினான் (ஆதியாகமம் 32:24-28). இந்த நடுராத்திரியில், தூதனானவரைத் (ஆண்டவரை) தவிர, என்னோடு வேறு யாரும் போராடமுடியாது என்பதை யாக்கோபு தெளிவாக அறிந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பிடித்து அழுதான். வேதம் சொல்லுகிறது:

**"அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார். கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்; யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்" (ஓசியா 12:4,5).**

யாக்கோபு தூதனானவரிடம் போராடி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு, ஏசாவை பார்க்கும்படி கடந்துசென்றான். பகைமை நீங்கி, அந்த இடத்தில் ஐக்கியம் உண்டானது. ஏசா, யாக்கோபை கட்டித் தழுவி, முத்தஞ்செய்தான் (ஆதியாகமம் 33:4).

ஆண்டவர் இந்த டிசம்பர் மாதத்தில் தேவ தூதர்களை உங்கள் குடும்பத்திற்குள் அனுப்பி ஆசீர்வதிக்கிறார். அந்த தூதர்கள் என்னனென்ன பணியை செய்கிறார்கள்? எதற்காக நம்முடைய குடும்பத்திற்குள் வருகிறார்கள்? என்பதைக் குறித்து நாம் தியானிக்கவிருக்கிறோம்.

## 1) முதலாவது தூதன் – 'பிரிந்துபோகிற குடும்பங்களை இணைக்கிற தூதன்':

முதலாவது, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில், ஆண்டவர் அனுப்புகிற தூதன், பிரிந்துபோகிற உங்கள் குடும்பங்களை இணைக்கிற தூதனாக, கணவன் மனைவிக்குள் ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்கிற தூதனாய் இருப்பான். அந்த தூதன் உங்களுடைய குடும்பங்களில் பிரச்சனைகளை, பிரிவினை, சந்தேகங்களை உண்டுபண்ணுகிற பொல்லாத ஆவிகளை துரத்தி, உங்கள் குடும்பங்களை இணைக்கிற, தூதனாக இருப்பார். வேதம் சொல்லுகிறது:

**"...அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று**



**காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்" (மத்தேயு 1:18,19).**

இப்பொழுதுதானே மரியாளை நிச்சயம் செய்துள்ளேன். அதற்குள்ளாக தனக்கென்று நிச்சயம் செய்த மனைவி பிள்ளைத்தாய்ச்சியாக இருக்கிறாளே, என்ன செய்வது? மரியாளை இரகசியமாய் தள்ளி விடலாமா? என்று யோசேப்பு குழம்பியிருந்தான். வேதம் சொல்லுகிறது:

**"...கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது" (மத்தேயு 1:20)**

யோசேப்பு, மரியாளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், ஆண்டவர் தேவ தூதனை அனுப்பினார். யோசேப்பின் தவறான எண்ணங்களை, சிந்தனைகளை அந்த தேவ தூதன் ஒரு நொடியில் மாற்றினான். யோசேப்பு, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டான் (மத்தேயு 1:21). அதுபோல ஆண்டவர் உங்கள் குடும்பத்திற்குள் அனுப்புகிற தூதன், பிரிந்து கிடக்கிற உங்கள் குடும்பத்தை இணைத்து, கணவன் மனைவிக்குள் ஒருமனதையும், ஒற்றுமையையும் கட்டளை யிடுவான். நீங்கள் சமாதானமாய் வாழ்ந்திருப்பீர்கள். கவலைப்படாதிருங்கள்.

## 2) இரண்டாவது தூதன் – 'திருமண தடைகளை உடைத்து, மங்கள வார்த்தைகளை நிறைவேற்றுகிற தூதன்':

இரண்டாவது, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் ஆண்டவர் உங்கள் குடும்பங்களுக்குள் அனுப்பும் தூதன், உங்கள் குடும்பங்களிலிருக்கிற திருமண தடைகளை உடைத்து, உங்கள் பிள்ளைகளுடைய, உறவினர்களுடைய திருமணங்களை நடத்தித் தருவது! ஆமென். யோசேப்புக்கும், மரியாளுக்கும் திருமணம் நடக்கவிருந்தபோது ஒரு தடை இருந்தது. அந்தத் தடையை தேவ தூதன் உடைத்தான். இன்றைக்கு உங்கள் குடும்பத்தில் நடைபெற விருக்கிற சுபநிகழ்வுகளை தடுக்கிற அசுத்த ஆவிகளை ஆண்டவர் வெளியேற்றி, சுப நிகழ்வுகளை நடத்தி வைக்கிற தூதனாய் வருகிறார். அந்த தூதன் உங்கள் அருகில் இருந்து, உங்களுக்கு அற்புதம் செய்கிறார். அல்லேலூயா.



ஒருமுறை மூலச்சல் என்ற பகுதிக்கு நான் ஊழியத்திற்காக சென்றிருந்தேன். அப்பொழுது ஒரு தாயார், "ஐயா, என் மகளுக்கு 30 வயதாகிறது. 25 வயதிலிருந்து நாங்கள் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்துவருகிறோம். இன்னும் திருமணம் நடக்க வில்லை. ஏதாவது ஒரு தடை வந்துகொண்டே இருக்கிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்றார்கள். அப்பொழுது அந்த மகளுக்காக ஜெபிக்கும்போது ஆண்டவர் சொன்னார், "மகளே பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். 30 வருடங்களுக்குப் பிறகு நான் உனக்கு ஜீவவிருட்சத்தின் கனியை கொடுப்பேன்" என்று மங்கள வார்த்தை சொன்னேன். கூட்டம் முடிந்து ஒரு சில வாரங்களுக்குள் அமெரிக்காவிலுள்ள ஒரு டாக்டரோடு நிச்சயதார்த்தம் முடிய ஆண்டவர் கிருபை செய்தார். அல்லேலூயா.

ஆம், உங்கள் மத்தியில், உங்களுக்கு மிக அருகில் இறங்கி வந்திருக்கிற தூதன் உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் மங்கள வார்த்தை சொல்லி, அதை நிறைவேற்றுகிறவன். வேதம் சொல்லுகிறது:

**"அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்... தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" (லூக்கா 1:28,30,31).**

ஆம் தேவ தூதன் மரியாளுக்கு, மங்கள வார்த்தை சொல்லி வாழ்த்தினான். "இதோ நீ கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக" என்றான்.

பல வருடங்களுக்கு முன், ஜெபர்சன் & ஏஞ்சல் என்ற தம்பதியர் என்னோடுகூட இஸ்ரேல் புனித பயணத்திற்கு வந்தார்கள். அவர்களுக்கு திருமணம் முடிந்து 10 வருடங்களாகியும் குழந்தை இல்லாமல் இருந்தார்கள். இயேசு கிறிஸ்து பிறந்த இடத்திலே அந்த தம்பதியருக்காக கண்ணீரோடு அழுது ஜெபித்தேன். ஒரு முறை நான் ஜெபத்தில் இருக்கும்போது ஆண்டவர் "ஏஞ்சல்" என்ற பெயரை நினைபூட்டினார். உடனே என் அலுவலகத்தோடு தொடர்புகொண்டு, அவளது கைபேசி எண்ணை கண்டுபிடித்து, தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். என்ன விஷயம் என்று அவள் கேட்டாள். "ஆண்டவர் உனக்குப் போன் பண்ணச் சொன்னார். நான் போன் பண்ணியிருக்கிறேன். நாம் ஜெபிப்போம். ஒருவேளை ஆண்டவர் உனக்கு மங்கள வார்த்தை சொல்லலாம்" என்றேன். நான் ஜெபிக்க ஆரம்பித்த உடனே, ஆண்டவர், "கிருபை பெற்றவளே வாழ்க. ஸ்திரீகளுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். பிறக்கப் போகிற உன் கர்ப்பப் பிறப்புகளும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும்" என்று மறுபடியும், மறுபடியும் சொன்னார். அவளுடைய கணவருக்கு இதை கேட்டதும் ஒரே ஆச்சரியம். ஏனென்றால் அவர்கள் குழந்தை பாக்கியத்திற்காக எடுக்காத மருந்தே கிடையாது. அவர் தன் மனைவியிடம், "சகோதரர் சொன்ன மங்கள வார்த்தையை அப்படியே விசுவாசிப்போம்" என்றார். அதே மாதத்திலேயே ஆண்டவர் அவரது மனைவியின் கர்ப்பத்தை ஆசீர்வதித்தார். சரியான நேரத்தில், அவரது மனைவி பூரண வளர்ச்சியுள்ள 2 ஆண் பிள்ளைகளை பெற்றெடுத்தார்கள். அல்லேலூயா.

தேவனுடைய பிள்ளைகளே, இந்த மங்கள வார்த்தைகளை வாசிக்கும்போதே ஆண்டவர் உங்களுக்கும் மங்கள வார்த்தை சொல்லுகிறார். உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், உறவினர் களுக்கும் அடைக்கப்பட்ட கர்ப்பங்கள் திறக்கும். கர்ப்பப் பையிலிருக்கிற கட்டிகள் மாறும். செத்துப்போன டியூப்களை ஆண்டவர் மறுபடியும் உயிர்ப்பிப்பார். ஏற்கனவே டியூப்பில் கருதங்கி, அது அழிந்திருக்கலாம். இனி கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இல்லை என்று மருத்துவர் சொல்லியிருக்கலாம். இன்றைக்கு ஆண்டவர் புதிய டியூப்பை பொருத்தி, ஆண்டவர் உங்களுக்கு அற்புதம் செய்கிறார். அல்லேலூயா. மனம் கலங்காதிருங்கள்.

## 3) மூன்றாவது தூதன் – 'எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும் நற்செய்தியை கொண்டுவருகிற தூதன்':

மூன்றாவது, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் உங்கள் குடும்பங்களுக்குள் ஆண்டவர் அனுப்பும் தூதன், மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும் நற்செய்தியை கொண்டுவருவான். அந்த தேவ தூதன் கிறிஸ்து பிறப்பைக் குறித்து சந்தோஷமான செய்தி சொல்லுகிறான், பாருங்கள்!

**"தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்கா 2:10–14).**

ஒரு கூட்ட மேய்ப்பர்கள் பகலெல்லாம் ஆடுகளை மேய்த்து களைத்து, இரவு நேரத்தில் குளிர் காய்ந்துகொண்டிருந்தார்கள். திடீரென வானம் திறந்து, ஒரு தேவ தூதன் இறங்கி வருகிறதை அவர்கள் கண்டு, பயந்தார்கள். அப்பொழுது அந்த தேவ தூதன், "பயப்படாதிருங்கள். இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்றைக்கு கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையை துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருப்பதை நீங்கள் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்று சொன்னான்.

மறுபடியும் வானம் திறந்தது, மளமளவென ஒரு கூட்ட தேவ தூதர்கள் இறங்கி வந்தார்கள். அந்த தேவ தூதர்களுக்கு "பரம சேனையின் திரள்" என்று பெயர். அவர்கள், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று ஆண்டவரை துதித்தார்கள். ஆம், உங்கள் குடும்பத்திலும் மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும் நல்ல காரியங்கள் நடக்கும். அதுமட்டுமல்ல குடும்பங்களிலே சமாதானம் பிறக்கும்.



பிரியமான தேவ ஜனமே, டிசம்பர் மாதம் ஆண்டவரை துதிக்கிற மாதம். 11 மாதங்கள் கர்த்தர் நம்முடைய வாழ்வில் செய்த நன்மைகளுக்கு நன்றிசொல்லி நாம் துதிக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவர் இந்த டிசம்பர் மாதத்தில் நம்முடைய குடும்பங்களிலே இன்னும் ஆசீர்வாதங்களை, இன்னும் நன்மையான காரியங்களை செய்தருளுவார். அல்லேலூயா.

## 4) நான்காவது தூதன் – 'உங்கள் பிள்ளைகளை பாதுகாக்கிற தூதன்':

நான்காவது, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில், ஆண்டவர் உங்கள் குடும்பங்களுக்குள் அனுப்பும் தூதன், உங்கள் பிள்ளைகளை பாதுகாக்கிற தூதனாக இருப்பார். ஒருவேளை உங்கள் வீட்டைச் சுற்றிலும் இருக்கும் பொல்லாத மனிதர்கள்/பிசாசுகள் உங்கள் பிள்ளைகளுக்கு நோயை வருவித்து, அவர்களை அழிக்கவேண்டும் என திட்டம் போடலாம் அல்லது அவர்கள் வாழ்வில் மறைமுகமாக கண்ணிகளை வைத்திருக்கலாம்! அந்த கண்ணிகளையெல்லாம்

ரத்துசெய்கிற (Cancel) ஒரு தேவ தூதன் இன்றைக்கு இந்த மங்கள வார்த்தையை படிக்கும்போதே, உங்களுக்கு மிக அருகில் நிற்கிறான். வேதம் சொல்லுகிறது:

**"அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான். அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்க தரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்தேயு 2:13-15).**



இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே பிறந்தவுடனே அவரை கொலைசெய்ய ஏரோது வகை தேடினான். அதுபோல இன்றைக்கு அநேக பிள்ளைகளை கர்ப்பத்தில் இருக்கும்போதே பிசாசானவன் எப்படி கொலைசெய்யலாம்? எப்படி அவர்களை அழிக்கலாம்? என வகை தேடுகிறான். பிசாசின் கிரியைகளை, அவனுடைய தந்திரங்களை அழிக்கும்படிக்கே தேவ குமாரன் வெளிப்பட்டார் (1 யோவான் 3:8).

ஆம், என் அன்பு தேவ பிள்ளைகளே, இன்றைக்கு உங்கள் பிள்ளைகளை அழிக்க சத்துரு போட்டுள்ள தீயஆலோசனைகளை, திட்டங்களை ஆண்டவர் அழிப்பார். உங்கள் பிள்ளைகளை அழிக்கும்படி ஒரு வழியாய் வருகிறவன் ஏழு வழியாய் திரும்பி ஓடுவான் (ஏசாயா 54:17). அல்லேலூயா.

## 5) ஐந்தாவது தூதன் – 'புது வருடத்தில், புது வழியை திறந்து கொடுத்து, ஆண்டவரே உங்களுக்கு தூதனானவராக / துணையாக வருகிறார்':

ஐந்தாவது, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் ஆண்டவர் அனுப்பும் தூதன், வரவிருக்கிற புது வருடத்தில் புது வழிகளை உங்களுக்குத் திறந்து கொடுப்பதோடு, அவரே உங்களுக்கு ஒரு தூதனானவராக, துணையாக வருவார்.

**"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள். பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள்" (மத்தேயு 2:11,12).**

இயேசு கிறிஸ்துவைப் பார்க்கும்படி கிழக்கிலிருந்து 3 சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள். அவர்கள் யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே என்று விசாரித்தார்கள்? எரோது அதை கேள்விப்பட்டபோது, இயேசுவை கொலைசெய்ய வகை தேடினான். ஆனால், சாஸ்திரிகள் இயேசுவை தரிசிக்க, ஒரு நட்சத்திரம் வழிகாட்டியது. சாஸ்திரிகள் திரும்பிச் செல்லும்போது, அவர்களை, ஆண்டவர் தம்முடைய தூதனை அனுப்பி எச்சரிக்காமல், அவரே, தூதனானவராக நேரடியாக அவர்களுக்கு சொப்பனத்தின் மூலம் தரிசனமாகி, நீங்கள் வந்த வழியாகச் போகவேண்டாம் என எச்சரித்தார். ஆகவே அவர்கள் திரும்பிச் செல்லும்போது, புதிய வழியில் சென்றார்கள்.



அதுபோல ஆண்டவர் வருகிற புதிய வருடத்தில் உங்களுக்கு புதிய வழிகளை காண்பிப்பார். புதிய புதிய ஆசீர்வாதங்களினால் உங்களை நிறைப்பார் (சங்கீதம் 65:11). ஆகவே, உங்கள் பழைய வாழ்க்கையை, பாவ வழிகளை, தவறான தொடர்புகளை, மாம்சீக இச்சைகளை இந்த பழைய வருடத்தில் அப்படியே விட்டுவிடுங்கள் (நீதிமொழிகள் 28:13). வருகிற புதிய வருடத்தில் ஆண்டவரோடு நடக்கிற, அவரோடு பேசி நேரங்களை செலவிடுகிற, அவருடைய சித்தத்தை மட்டும் செய்கிற அனுபவங்களை கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பிறக்கப்போகிற புதிய வருடத்தில் கிறிஸ்துவுக்குள் புதிய புதிய ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துக்கொள்வோம்! (எபேசியர் 1:3).

ஆம் தேவனுடைய பிள்ளைகளே, இந்த வருடம் முழுவதும் கொரோனாவினால் உபத்திரவத்தின் பாதையில் வறண்டுபோன, துவண்டுபோன என்னுடைய வாழ்வில் அற்புதங்கள் நடக்குமா? துளிர்விடும் காலம் வருமா? தேவ தூதன் என்னுடைய வாழ்வில் பிரவேசித்து, எனக்கு உதவிசெய்வானா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அப்போஸ்தலனாகிய பவுல் கப்பல் சேதத்தில் மிகுந்த வேதனையோடு இருந்தான். கப்பல் சேதமே அல்லாமல் உங்களோடு யாத்திரைசெய்கிற ஒருவருக்கும் எந்த சேதமும் வராது என தேவனுடைய தூதனானவன் பவுலுக்கு இரவில் சொப்பனத்தில் கூறினான் (அப்போஸ்தலர் 27:22-25). எலியா உபத்திரவத்தில் இருந்தபோது சூரைச்செடியின் கீழ்படுத்து நித்திரைபண்ணினான். கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி, அவனை தட்டி எழுப்பி, அவனுக்கு போஜனம் கொடுத்து, நீ போகவேண்டிய தூரம் வெகுதூரம் என்றான். எலியா அந்த போஜனத்தின் பெலத்தினால், 40 நாட்கள் இரவு பகல் ஓரேப் பர்வதம் மட்டும் நடந்துபோனான். (1 இராஜாக்கள் 19:4-8). அதுபோல மோசேக்கும் முட்செடியில் தரிசனம் கொடுத்த தூதனானவர் (யாத். 3:2; அப். 7:30), உங்களுக்கும் தரிசனம் கொடுப்பார். கலங்காதே மகளே, கலங்காதே மகனே, உன்னுடைய வாழ்வில் நிச்சயம் அற்புதங்கள் நடக்கும்! ஆமென்.

**...இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன் (யாத்திராகமம் 23:20)** என்ற மங்கள வார்த்தையின்படியே, உங்களுக்கு நிறைவான பலன் கிடைக்க தொடர்ந்து பிரார்த்தனை செய்கிறேன்.

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



Happy Birthday

**டிசம்பர் மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உங்கள் அனைவருக்கும் தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்!**

"...கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்"
உபாகமம் 28:14

## 2020 ஆம் ஆண்டில் தேவனின் அன்பு ஊழியங்களில் ஆத்தும அறுவடை:

# அறுப்பு மிகுதி

Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர - சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

2020-ஆம் ஆண்டில் தேவனின் அன்பு ஊழியங்கள் மூலம் ஆண்டவர் செய்துள்ள அற்புதங்களையும், அதிசயங்களையும், மகத்து வங்களையும் குறித்து எழுதுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். ஆம், கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். இதினிமித்தம் நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம் (சங்கீதம் 126:3).

டிசம்பர் மாதம் வந்துவிட்டாலே எல்லா ருக்கும் ஒரே சந்தோஷம்தான். ஏனென்றால் அது கிறிஸ்துமஸ் மாதம். புதிய புதிய ஏதிர்பார்ப்பு களோடு 2021-ஆம் வருஷத்தின் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுகிற மாதம்.

**"...அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்..." (மத்தேயு 9:37,38).**

என்ற வேத வசனங்களின்படி ஆண்டவர் 2020-ஆம் ஆண்டு முழுவதும் தேவனின் அன்பு ஊழியங்கள் மூலம் மகிமையான காரியங்களைச் செய்தார். சகோதரரை தமது ஆவியினாலும், வரங்களினாலும் நிறைத்து, ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தினார் (அப்போஸ்தலர் 1:8). இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை "தேவனின் அன்பு" ஊழியத்தில் நடப்பித்து, ஆண்டவர் இன்றும் ஜீவிக்கிறார் என்பதை சகோதரர் மூலம் நிரூபித்தார். 2020-ஆம் ஆண்டு, "இரக்கத்தின் ஆண்டு" என்று சகோதரர் மூலம் ஆண்டவர் வெளிப்படுத்தியிருந்தார்.

**"இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்பி, அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கஞ்செய்வேன் (எரேமியா 33:26).**

மேற்கண்ட மங்கள வாக்கின்படி, 2020-ஆம் ஆண்டு முழுவதும் இந்த உலகம் கொரோனா தாக்கத்தில் இருந்தாலும், தேவனின் அன்பு ஊழியங்களில் அவருடைய கிருபையும், இரக்கமும், வழிநடத்துதலும் இருந்ததை நான் கண்ணார கண்டிருக்கிறேன். காரணம், இவ்வூழியத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்ட, தொடப்பட்ட, ஆத்துமாக்களுக்காக நானும், சகோதரரும் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க தவறியதே இல்லை. ஆண்டவர் ஜெபங்களைக் கேட்டு, தேவனின் அன்பு ஊழியத்தோடு தொடர்புடைய அனைவருக்கும்; 2020-ஆம் ஆண்டு முழுவதும் நல்ல பாதுகாப்பை அருளி, இரக்கம் பாராட்டியிருப்பதை நினைக்கும்போது, அவருக்கு என்னால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசொல்லாமல் இருக்கவே முடியாது (சங்கீதம் 103:1,2).

இதை வாசிக்கிற கர்த்தருடைய பிள்ளைகளே இந்தக் கொரோனா நோய் என்னையும், என் குடும்பத்தையும் அழித்துவிடுமோ என்ற சந்தேகம் ஒருபோதும் உங்களுக்கு வேண்டாம். தேவனுடைய அன்பு ஊழியங்களில் இணைந்துள்ள உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தினர் யாவருக் காகவும் நானும், சகோதரரும் தொடர்ந்து ஜெபிப்போம் என்று வாக்கு கொடுக்கிறோம். "இஸ்ரவேலின் தேவன் உங்கள் நடுவில் இருக்கிறார். இனி தீங்கை நீங்கள் காண்பதில்லை" (செப்பனியா 3:15) என்ற ஆண்டவரின் அருள்வாக்கு உங்கள் வாழ்வில் நிறைவேறுவதாக! ஆகவே சந்தோஷமாக கிறிஸ்து பிறப்பை கொண்டாடுவோம். வரவிருக்கிற புதிய வருடத்தை ஜெபத்தோடு வரவேற்போம்.

## ஆவிக்குரிய ஜீவியத்தில் அறுவடை



2020-ஆம் ஆண்டு முழுவதும் நாம் பொது முடக்கத்தில்தான் (Lockdown) இருந்துள்ளோம். அநேகர் தங்கள் வேலைகளை, சொந்த தொழில்களை இழந்திருக்கின்றார்கள். பொருளாதார இழப்பு, தனி மனிதனுடைய வாழ்க்கையை சீரழித்துவிட்டது. ஆனாலும் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஆவிக்குரிய ரீதியில் ஒரு முன்னேற்றம், ஆண்டவரோடு ஒரு நெருக்கம் ஏற்பட்டுள்ளது. அநேகருடைய வாழ்வில் ஜெப நேரங்கள் அதிகமாகியிருக்கிறது. அநேகர் இந்த நாட்களில்தான் தங்கள் தனி ஜெபத்திற்கென்று நேரத்தை ஒதுக்கியிருக்கின்றீர்கள். இன்னும் அநேகர் தங்கள் கோணலான வழிகளை விட்டு மனம் திரும்பியதோடு, ஆண்டவரை தங்கள் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒருபுறம் கொரோனா வைரஸ் உலக மக்களின், பொருளாதாரத்தை அழித்தாலும், கொரோனா தாக்கத்திற்குப் பிறகு, ஆண்டவருடைய அறுவடை ஏராளம்! ஆவிக்குரிய வாழ்வில் ஒரு பெரிய விசாலத்தை, அறுவடையை இந்த உலகம் கண்டுள்ளது. அதுபோல தேவனின் அன்பு ஊழியங்கள் மூலம் ஆண்டவர் செய்துள்ள அற்புதங்களை நாம் சுருக்கமாக பார்த்து, ஆண்டவருக்கு நன்றிசெலுத்துவோம்!

## தேவனின் அன்பு ஜெப கோபுரங்கள் மூலம் அறுவடை




2020-ஆம் ஆண்டு முழுவதும் சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை ஜெப கோபுரங்களின் மூலம் ஆண்டவர் மகிமையான காரியங்களை நடப்பித்தார். தேவனின் அன்பு ஜெப கோபுரங்கள், சென்னை, மும்பை மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில், காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை இயங்கிவருகிறது. ஜெப கோபுரங்களுக்கு வந்தவர்கள், வந்தவண்ணமாக அல்ல, தங்களுடைய

ஆவிக்குரிய வாழ்வில், குடும்ப வாழ்வில் ஒரு உத்வேகத்தையும், அற்புதங்களையும் பெற்று சென்றுள்ளார்கள். இந்த வருடம் முழுவதும் பிரச்சனைகளோடு, வேதனைகளோடு, வியாதிகளோடு, பிசாசின் கட்டுகளோடு, போராட்டங்களோடு ஜெப கோபுரங்களுக்கு வருகை தந்துள்ள அனைவரும் விடுதலையடைந்துள்ளார்கள். முறிந்த உறவுகள், பிரிந்த குடும்பங்கள் கட்டப்பட்டுள்ளன. தீராத நோய்களோடு வந்தவர்கள், அற்புத சுகம் பெற்றுள்ளனர்.

## தனி ஜெபத்தின் மூலம் அறுவடை



2020-ஆம் ஆண்டு முழுவதும் சகோதரரின் தனி ஜெபத்தின் மூலம் ஆண்டவர் மகிமையான காரியங்களைச் செய்துள்ளார். தேவனின் அன்பு ஜெப கோபுரத்திற்கு வருகின்றவர்கள், சகோதரரை நேரடியாக பார்த்து ஜெபிக்க விரும்புகின்றனர். அப்படிப்பட்டவர்களை இந்த ஆண்டு முழுவதும் சகோதரர் அவர்கள் சென்னை, மும்பை மற்றும் நாகர்கோவில் ஜெப கோபுரங்களில் தனித்தனியாக பார்த்து, ஜெபிக்க ஆண்டவர் கிருபை செய்தார். சகோதரரின் நேரடி ஜெபத்தில் அநேக அற்புதங்கள் நடந்திருக்கின்றன. அநேகர் சுகம் பெற்றுள்ளனர் (யாக்கோபு 5:15). பிரச்சனைகளோடு வருகிறவர்கள், பிரச்சனைகள் தீர்ந்து, சமாதானமாய் வாழ்ந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அல்லேலூயா.

## தொலைபேசி ஜெப கோபுரம் மூலம் அறுவடை



2020-ஆம் ஆண்டு முழுவதும் தொலைபேசி ஜெப கோபுரத்தின் மூலம் ஆண்டவர் மகிமையான காரியங்களை செய்துள்ளார். எங்கள் தொலைபேசி ஜெப கோபுரத்தில், பல்வேறு மொழிகளில் ஜெப வீரர்கள் தொலைபேசி மூலம் ஜெபிக்க 24 மணி நேரமும் ஆயத்தமாய் இருக்கிறார்கள். உலகெங்கிலுமிருந்து 2020-ஆம் ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் ஜெபத்திற்காக தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடா மற்றும் இந்தி மொழிகளில் தொலைபேசி அலைபேசியின் மூலம் தொடர்புகொண்ட அனைவருக்கும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டுள்ளது. விசேஷமாக 2020ஆம் ஆண்டு முழுவதும் தொலைபேசி ஜெபங்கள் மூலம் 1,30,000 ஆத்துமாக்கள் தொடப்பட்டுள்ளனர். வேதனையோடும், பாடுகளோடும், பிரச்சனைகளோடும் தொடர்புகொண்டு, ஜெபித்தவர்கள், வாழ்வில் வியத்தகு முன்னேற்றங்களையும், சுபீட்சங்களையும் பெற்றுள்ளனர். இயேசு கிறிஸ்து உயிரோடு இருந்த நாட்களில் அற்புதங்கள் நடந்ததுபோல தேவனின் அன்பு ஊழியத்தின் தொலைபேசி ஜெபங்கள் மூலமும் அற்புதங்கள் நடந்துள்ளது. ஜெபத்திற்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் அலைபேசி எண்கள்:



## ஜெப எண்ணெயின் மூலம் அறுவடை



ஜெப எண்ணெயின் மூலம் தேவனின் அன்பு ஊழியங்களில் ஆண்டவர் 2020 ஆண்டு முழுவதும் மகிமையான காரியங்களைச் செய்துள்ளார். ஜெப எண்ணெய், சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை தேவனின் அன்பு ஜெப கோபுரங்களுக்கு வருகிற அனைவருக்கும், குறிப்பாக "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகையிலும் மற்றும் "ஆறுதலை தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனையிலும், தேவனின் அன்பு ஊழியங்கள் சார்பாக நடத்தப்படும் அனைத்து பிரார்த்தனைக் கூட்டங்களிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஜெப எண்ணெயின் மூலம் அநேகர் தீராத வியாதியிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் சுகம் பெற்றுள்ளனர். அல்லேலூயா.

## தொலைக்காட்சி ஊழியங்கள் மூலம் அறுவடை




2020-ஆம் ஆண்டு முழுவதும் 6235 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, 5 மொழிகளில் (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி) 25 சேனல்களில் உலகெங்கிலும் ஒளிபரப்பியிருக்கிறோம். எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் லட்சக்கணக்கானோர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். எண்ணுக்கடங்காத சாட்சிகள் வந்துகொண்டே இருக்கின்றன. தொலைக்காட்சி ஊழிய நிகழ்ச்சிகளைக் குறித்த கூடுதல் விபரங்களை அறிந்துகொள்ள, ***https://www.godslove ministries.co.in-/about-us/tv-schedule/*** என்ற இணையதள Link-ல் பார்த்து தெரிந்து கொள்ளலாம் அல்லது இப்பத்திரிகையின் கடைசி பகுதியில் பார்த்து

## இணையதளம் மற்றும் சமூக வலைத்தள ஊழியங்கள் மூலம் அறுவடை




2020-ஆம் ஆண்டு முழுவதும் உலகெங்கிலும் எங்கள் வலைத்தளங்கள், வாட்ஸ் அப், முகநூல், இன்ஸ்டாகிராம் ஊழியங்கள் மூலமாக லட்சக்கணக்கானோர் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளனர். எங்கள் வலைத்தளத்தில், அனுதினமும் வாக்குத்தத்த செய்திகள், வீடியோ செய்திகள், அற்புத சாட்சிகள், யூடியூப் செய்திகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. 2020-ஆம் ஆண்டு முழுவதும் மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் நாங்கள் நடத்தும் "அன்பரின் பாதத்தில் ஒருநாள்" உபாவசக் கூடுகையை எங்கள் வலைத்தளத்தில் நேரலை நிகழ்வாக்குகிறோம் **(Live Telecast)** இந்நேரலை நிகழ்வின் மூலம் உலகெங்கிலும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் ஏராளம். மேலும் விபரங்களுக்கு:

*வலைதளம்* : ***godsloveministries.co.in***
*முகநூல்* : ***Evg.T. Stephen***
*யூடியூப்* : ***Evg.T. Stephen***

## மின்னஞ்சல் மற்றும் கடிதங்கள் மூலம் அறுவடை



அனுதினமும் தேவனின் அன்பு ஊழியங்களுக்கு உலகெங்கிலுமிருந்து தபால் மூலமும், மின்னஞ்சல் (Emails) மூலமும் ஒவ்வொரு நாளும் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. சிலர் ஆண்டவரின் சித்தம் என்ன? என்று ஆண்டவரிடம் கேட்டு சொல்லுங்கள் என்று கடிதம் எழுதுகிறார்கள். அவற்றிற்காக சகோதரர் அவர்கள் பிரத்யேகமாக ஜெபித்து, ஆண்டவர் கொடுக்கும் மங்கள வார்த்தையோடு, வெளிப்பாடுகள் நிறைந்த பதில்களை உடனடியாக அவர்களுக்கு அனுப்பி வைக்கிறார். கடித ஊழியங்கள் மூலம் 2020-ஆம் ஆண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்.

## இ-பத்திரிகையின் மூலம் அறுவடை



ஆண்டவருடைய பெரிய கிருபையினாலும், அவருடைய வழிநடத்துதலினாலும் 2020 ஜுலை மாதத்திலிருந்து இ-பத்திரிகை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடும்படி கிருபை செய்தார். மாதந்தோறும் இ-பத்திரிகையை எங்களது பங்காளர்கள் மற்றும் எங்களை தொடர்புகொள்கிற அனைவருக்கும் மின்னஞ்சல் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அனுப்பி வருகிறோம். பத்திரிகை ஊழியத்தின் மூலம் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் அநேகர்.

## பிரார்த்தனை திருவிழாக்கள் மூலம் அறுவடை

கர்த்தருடைய பெரிய கிருபையினாலும், உங்கள் யாவருடைய ஜெபங்களினாலும் 2020-ஆம் ஆண்டு முழுவதும் நடைபெற்ற அனைத்துக் கூட்டங்களிலும் ஆண்டவர் சகோதரரை வல்லமையாக பயன்படுத்தினார். ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் நேரடியாகப் பெற்றுக்கொண்டனர். கூட்டங்களின் விபரங்களை கீழே தந்துள்ளேன்.

| | |
|---|---|
| **ஜனவரி 1, 2020** | **புத்தாண்டு ஆசீர்வாதப் பெருவிழா, சென்னை** |
| **ஜனவரி 10-12, 2020** | **குமரி ஆசீர்வாதத் திருவிழா, நாகர்கோவில்** |
| **ஜனவரி 19, 2020** | **மும்பை ஆசீர்வாதப் பெருவிழா, மும்பை** |
| **ஜனவரி 25,26, 2020** | **ஆசீர்வாதப் பெருவிழா, பம்மல், சென்னை** |
| **பிப்ரவரி 7-9, 2020** | **சந்தோஷப் பெருவிழா, கூடலூர்** |
| **பிப்ரவரி 15, 2020** | **விடுதலைப் பெருவிழா** (TYM Church), **சென்னை** |
| **பிப்ரவரி 21-23, 2020** | **ஆசீர்வாதப் பெருவிழா (ஏலீம் திருச்சபை), சென்னை** |
| **பிப்ரவரி 29, 2020** | **விஷன் - மிஷன் பாண்டி - 2020, பாண்டிச்சேரி** |
| **மார்ச் 8, 2020** | **ஞாயிறு சிறப்பு ஆராதனை, திருவள்ளூர்** |
| **மார்ச் 13-15, 2020** | **சிலுவை தியான ஐக்கியப் பெருவிழா, திருநெல்வேலி** |
| **நவம்பர் 15, 2020** | **அறுவடைப் பெருவிழா, சி.எஸ்.ஐ. கிறிஸ்துநாதர் ஆலயம், காருண்யா நகர், கோயம்புத்தூர்** |

**மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில்**
**அன்பரின் பாதத்தில் ஒரு நாள்**
**(ஏப்ரல் முதல் நேரலை நிகழ்வு)**
**சென்னை**

**மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில்**
**ஆறுதலைத் தேடி ஒரு நாள்**
**(ஜனவரி முதல் மார்ச் வரை)**
**சென்னை**

மேலும் சகோதரர் அவர்கள் மே மாதம் அமெரிக்கா தேசத்திற்காக ஜெபிக்கவும், ஜூன் 9-ஆம் தேதி யூடியூப் மூலம் ஜெப விண்ணப்பம் அனுப்பியவர்களுக்காக ஜெபிக்கவும், ஜூன் 14-ஆம் தேதி Elim Tamil Church London ஞாயிறு ஆராதனையிலும், ஜூன் 26-ம் தேதி மஸ்கட் மற்றும் குவைத் கூட்டங்களிலும், நவம்பர் 29,30 மற்றும் டிசம்பர் 1 ஆகிய நாட்களில் ஷார்ஜா கூட்டங்களிலும் நேரலையாக தேவ செய்தியளிக்கவும், மாதந்தோறும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாச கூட்டம் முடிந்தவுடன் அடுத்து வரும் செவ்வாய் கிழமைகளில், ஒவ்வொருவருடைய ஜெப விண்ணப்பங்களுக்காக நேரலையாக ஜெபிக்கவும் ஆண்டவர் கிருபை செய்தார்.

## இஸ்ரவேல் புனித பயணம்



தேவனின் அன்பு ஊழியங்களில் 2020 -ஆம் ஆண்டு முழுவதும் இஸ்ரேல் புனிதப் பயணத் துறையில் ஆண்டவர் மகிமையான காரியங்களைச் செய்தார். ஏற்கனவே புனிதப் பயணம் சென்று திரும்பியுள்ள அனைவரோடும் கைபேசி மூலம் தொடர்புகொண்டு, அவர்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க ஆண்டவர் கிருபை பாராட்டினார். கர்த்தருக்குச் சித்தமானால் தற்போதைய நிலைகள் மாறி, 2021-ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் புனிதப் பயணம் செல்ல அவரே வழிவாசல்களை திறந்துகொடுக்குமாறு தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## மார்வெல் திருமண தகவல் மையத்தின் மூலம் அறுவடை




2020-ஆம் ஆண்டில் மார்வெல் திருமண தகவல் மையத்தின் மூலம் அநேக திருமணங்கள் நடைபெற ஆண்டவர் கிருபை செய்தார். மேலும் கூடுதல் விபரங்களை, அறிய **www.marvelmatrimony.com** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் அல்லது அலைபேசி எண். **7824855999** தொடர்பு கொள்ளலாம்.

**"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்" (சங்கீதம் 116:12,13)**

என்ற வேத வசனங்களின்படி ஆண்டவர் 2020-ஆம் ஆண்டு முழுவதும் தேவனின் அன்பு ஊழியங்கள் மூலம் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை தொட்டார். அதற்காக ஆண்டவரை நன்றியோடு ஸ்தோத்திரிக் கின்றேன் (சங்கீதம் 103:1,2). அவருக்கே எல்லா துதி, கனம், மகிமை செலுத்துகிறேன். அல்லேலூயா.

தொடர்ந்து எனக்காகவும், சகோதரருக்காகவும், ஊழியங்களுக்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபமே எங்கள் பெலன்!

**BRO. STEPHEN AND FAMILY WISH YOU AND YOUR DEAR FAMILY A VERY**





# ‘இம்மானுவேல்’

## தேவன் நம்மோடிருக்கிறார்!

Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர - சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் தேவனின் அன்பு ஊழியங்கள் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

டிசம்பர் மாதம் வந்தாலே நமக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சிதான். புத்தாடை, கொண்டாட்டங்கள் என ஒரே சந்தோஷம்தான். இப்போதுள்ள சூழ்நிலைகள் நமக்குப் பாதகமாக இருந்தாலும் அவைகளை யெல்லாம் சாதகமாக மாற்றக் கூடிய தேவன் நம்மோடுகூட இருக்கிறார். எனவே, குடும்பத்தோடு சந்தோஷமாக இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையை அனுசரிப்போம்!

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தது உண்மையிலும் உண்மை. அவர் நமக்காகவே பிறந்திருக்கிறார். அவர் பிறப்பதற்கு முன்பே அவரைக் குறித்து சொல்லப்பட்டது என்னவென்றால்,

**“இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்” (மத்தேயு 1:23).**

வேதத்தில் ஆண்டவருக்குப் பல பெயர்கள் இருந்தாலும் அவைகளுள் ‘இம்மானுவேல்’ என்ற பெயர் மிகவும் விசேஷமானது. ‘இம்மானுவேல்’ என்பதற்கு “தேவன் நம்மோடிருக்கிறார்” என்று அர்த்தமாகும். ஆண்டவர் நம்மோடிருக்கும்போது நமக்கு என்ன கவலை. “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார்” (மத்தேயு 28:20).

கர்த்தர் ஆபிரகாமோடு இருந்து, அவருடைய சந்ததியை பெருகப்பண்ணினார் (ஆதியாகமம் 26:4,5). ஈசாக்கோடு இருந்து நூறு மடங்கு அறுவடை காணச் செய்தார் (ஆதியாகமம் 26:12,13). யோசேப்போடு இருந்து, அவரை உயர்த்தினார் (ஆதியாகமம் 41:40). தாவீதோடிருந்து,

அவரை ராஜாவாக அபிஷேகம் செய்தார் (2 சாமுவேல் 5:12). யோபுவோடிருந்து இரட்டிப்பாய் ஆசீர்வதித்தார் (யோபு 42:10). அந்த தேவன் நம்மைப் பார்த்து சொல்லுகிறார், "நீ பயப்படாதே. நான் உன்னுடனே இருக்கிறேன்" என்கிறார் (ஏசாயா 41:10). இது எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம்!

இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் ஆண்டவர் நம்முடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறந்து, அவர் நம்மோடிருக்கும்போது நம்முடைய வாழ்க்கையில் என்ன நடக்கும்? என்பதை குறித்து சுருக்கமாக பார்ப்போம்.

## 1 உங்களுக்கு உயர்வு உண்டாகும்

**"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப் போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2).**

எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேம் மிகவும் அற்பமாய் எண்ணப்பட்ட கிராமம். ஆனால் கிறிஸ்து அங்கு பிறந்தபோது முழு உலகத்தின் கண்களும் அந்த சிறு கிராமத்தின்மேல் பட்டது. பிறகு அதைப்பற்றி பாடுவோரும், பேசுவோரும் அதிகமாயினர். 'பெத்லகேம்' என்றால் "அப்பத்தின் வீடு" என்று பொருள். நமக்காக ஜீவனைக் கொடுத்த, ஜீவ அப்பம் நானே என்ற இரட்சகர் பிறந்த இடம் அது. பெத்லகேமில் தான் தாவீது ராஜா பிறந்தார். ஒரு நாள் சாமுவேலை கர்த்தர் தைலக்குப்பியோடு பெத்லகேமுக்கு போகும்படி கட்டளையிட்டார். அன்று தாவீதை பெத்லகேமிலே இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகித்தார் (1 சாமுவேல் 16:1).



இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கிற பிரியமான தேவ ஜனமே, இந்த கிறிஸ்துமஸ் காலங்களில், நீங்கள் ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்து, அவர் உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறக்க இடமளிக்கும்போது, அவர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் அபிஷேகித்து, ஆசீர்வதித்து உயர்த்துவது உறுதி! ஏனென்றால், நீங்கள் அவருடைய செல்லப் பிள்ளைகள். ஆகவே, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில், ஆண்டவரே நீர் என்னையும், என் குடும்பத்தையும் ஆசீர்வதியும் என்று அவரை இறுகப் பிடித்துக்கொள்வோம். அவரிடமிருந்து உயர்வைப் பெறுவோம்!

## உங்களுக்கு இரட்சிப்பு உண்டாகும் 2

**"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்தேயு 1:21).**

ஒரு மனிதன் இன்னொரு மனிதனை இரட்சிக்க முடியாது. சேற்றில் சிக்குண்ட ஒரு மனிதன், இன்னொரு மனிதனை மீட்க முடியாது. வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், தீய பழக்கத்திலிருந்தும் மீட்டு, நம்மை இரட்சிக்கும்படியாகவே மனிதனாய் பிறந்திருக்கிறார். சகேயுவின் வீட்டில் இயேசு பிரவேசித்தபோது அவன் வீட்டாருக்கு இரட்சிப்பு வந்தது (லூக்கா 19:5-6,9). இன்றைக்கும் கர்த்தர் உங்கள் ஒவ்வொருவருடைய சரீரத்தையும் தம்முடைய ஆலயமாக்கி, உங்களுக்குள்ளே. வாசம் பண்ணுகிறார் (1 கொரிந்தியர் 3:16). எதற்காக? உங்களை இரட்சிக்கும்படியாக. தீய காரியங்கள் உங்களை அணுகாதபடி, உங்கள் சரீரங்களை நீங்கள் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க! (ரோமர் 12:1)

ஆம், கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே, இந்த கிறிஸ்துமஸ் காலங்களில், ஆண்டவரே நீரே என் குடும்பத்தாரை, என் கணவரை, என் பிள்ளைகளை இரட்சியும் என்று நீங்கள் ஆண்டவரை இறுகப் பிடித்து, உங்களை அவருடைய கரங்களில் முற்றிலும் ஒப்புக் கொடுக்கும்போது, "நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்று யோசுவா சொன்னதுபோல தேவன் நம் யாவரையும் இரட்சிப்பார் (யோசுவா 24:15).

## 3 உங்கள் தனிமை மாறும்

**"தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதியாகமம் 2:18).**



இந்த உலகத்தில் தனிமையாக இருப்பது மிகவும் கடினமான காரியம். தனிமையில் இருக்கும்போது தான் மனிதன் பல தவறுகளைச் செய்கிறான். சாத்தான் அவனை எளிதாக வஞ்சித்துவிடுகிறான். எனவே தான் தேவன் எல்லாவற்றையும் நல்லது என்று சொல்லிவிட்டு, மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று சொல்லுகிறார். ஒரு மனிதனோடு கர்த்தர் இல்லாவிட்டால், அவன் தன் சுயத்தின்படி வாழ்க்கை நடத்துகிறான். ஏவாள் கணவனைவிட்டு, தனிமையாக தோட்டத்தில் உலாவியபோது தான் சாத்தான் அவளை வஞ்சித்து, ஏமாற்றிவிட்டான் (ஆதியாகமம் 3:13). நல்ல சமாரியன், எரிகோவுக்கு தனிமையாய் போனதினாலே கள்ளர்கள் கைகளில் அகப்பட்டான் (லூக்கா 10:30). ஒரு முறை தாவீது தனிமையாய் இருக்கும்போது இப்படி புலம்புகிறான்.

**"வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன். நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல் இருக்கிறேன்" (சங்கீதம் 102:6,7).**

தனிமை எவ்வளவு கொடியது பாருங்கள்! ஆகவே நீங்கள் எப்பொழுதும் இயேசுவோடு இணைந்து வாழ பழகிக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் தனிமை மாறி, உங்கள் வாழ்வு செழிக்கும்!

ஆம், எனக்கன்பான தேவ பிள்ளைகளே, ஆண்டவர் நம்மோடுகூட இருக்கும்போது நம்மை யாராலும் அசைக்க முடியாது. போராட்ட நேரங்களிலெல்லாம் அவர் நம்மோடு இருக்கிறார். அவர் நமக்காக யுத்தம்பண்ணுவார் (யாத்திராகமம் 14:14). அவர் வேறு எங்கோ அல்ல, உங்களோடு, உங்களுக்குள், உங்களை காக்கும்படியாக, உங்களோடு உலாவிக் கொண்டிருக்கிறார். பயப்படாதே, கலங்காதே, திகையாதே, ஜெபித்து ஜெயமெடுக்க கற்றுக்கொள்.

நாம் ஜெபிப்போமா. 'இம்மானுவேல்' – தேவன் நம்மோடு, நம் குடும்பத்தோடு இருக்கிறார் என்ற சந்தோஷத்தோடு கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை கொண்டாடுவோம். சந்தோஷமாக இந்தப் பாடலைப் பாடி, இயேசு பாலகனை நாம் மகிமைப்படுத்துவோம்.

**இயேசு என்னோடு இருப்பத நெனச்சிட்டா**
**என்னுள்ளம் துள்ளுதம்மா**
**நன்றி என்று சொல்லுதம்மா**
**ஆ.ஆ...ஓ.ஓ...லலல்லா...ம்ம**

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**I wish you all a Merry Christmas and a Prosperous New Year 2021.**

**ஜெபம்:**

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற பிள்ளைகளுடைய வாழ்வில் 'இம்மானுவேலாக' நீர் எப்பொழுதும் கூட இருந்து, அவர்கள் தனிமையை மாற்றி, அவர்களை இரட்சித்து ஆசீர்வதித்து உயர்த்துகிறபடியால் உமக்கு நன்றிசெலுத்துகிறேன். இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நீரே அவர்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் பிறந்து அவர்கள் ஒவ்வொருவரையும் மகிழ்விப்பீராக! அவர்கள் குடும்பமாக சந்தோஷமாய் உம்முடைய பிறப்பைக் கொண்டாட அருள்புரிவீராக! இயேசுவின் நாமத்தில், பிதாவே. ஆமென்.

# வேத வினா போட்டி –6 டிசம்பர் – 2020

## வேத வினா போட்டி விதிமுறைகள்

- சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும். அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில், பரிசளிக்கப்படும்.
- விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும்.
- விடைகள் ஒவ்வொரு மாதமும் 20-ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து சேரவேண்டும்.

## இம்மாத கேள்விகள்

1. இயேசு' மற்றும் 'இம்மானுவேல்' என்ற பெயர்களின் அர்த்தங்களை எழுதுக?
2. யோசேப்பும், மரியாளும் எகிப்தில் எவ்வளவு காலம் வாழ்ந்தார்கள்?
3. இயேசுவுக்கு 'நசரேயன்' என்ற பெயர் எப்படி வந்தது?
4. பெலத்லகேமின் இன்னொரு பெயர் என்ன?
5. கிறிஸ்துவைக் குறித்து முதன்முதலாக தீர்க்கதரிசனம் உரைத்தது யார்?
6. மரியாளின் முக்கியமான குணம் என்ன?
7. மரியாள் எத்தனை நாள் எலிசபெத்தோடு தங்கியிருந்தாள்?
8. குழந்தையின் பெயர் இயேசு என்று யோசேப்புக்கு யார் சொன்னது?
9. இஸ்ரவேலின் ஆறுதல்வர காத்திருந்தவன் யார்?
10. ஏரோது எந்த தேசத்து ராஜா?

## நவம்பர் மாத விடைகள்

1. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம், ஆரோனுடைய துளிர்த்த கோல் உடன்படிக்கையின் கற்பலகைகள் (எபிரெயர் 9:4).
2. 6 அடைக்கலப்பட்டணங்கள் இருந்தன (எண்ணாகமம் 35:15)
3. பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி (1 யோவான் 5:7)
4. மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது (சங்கீதம் 12:6).
5. வானம் அவருக்குத் திறக்கப்பட்டு, தேவ ஆவி புறாவைப் போல் தம்மேல் இறங்கி வருகிறதைக் கண்டார் (மத்தேயு 3:16).
6. பத்மு தீவில் (வெளிப்படுத்தல் 1:9).
7. சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள் (சங்கீதம் 125:1).
8. திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக் கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும் (லூக்கா 11:26)
9. நினிவே பட்டணத்தார் (லூக்கா 11:32)
10. நியாயத்தையும், அன்பையும் செய்ய வேண்டும். தசம பாகம் கொடுப்பதை விடாதிருக்க வேண்டும் (லூக்கா 11:42).

WINNERS

## குலுக்கல் முறையில் நவம்பர் மாதம் பரிசை வென்றவர்கள்

Sis. ஜாஸ்லின் பபிதா,
ராஜாக்கமங்கலம்

Sis.குயினி எபநேசர்,
பெரம்பூர், சென்னை

பதில்கள் அனுப்பவேண்டிய முகவரி

**Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்**
**தேவனின் அன்பு ஊழியங்கள்**
எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை – 600 041. Mobile: + 91 44 24547999 / 9941950999
Email: prayer@godsloveministries.co.in - www.godsloveministries.co.in

# ஆண்டவரின் அற்புதங்கள்



சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் ஆண்டவருடைய முழு நேர அழைப்பை பெற்று, "தேவனின் அன்பு ஊழித்தை ஸ்தாபித்து, உலகெலங்கிலும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் ஒரு கிருபாபாத்திரம். இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் இவர் நடத்தும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை மற்றும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனைகள் உலகப் பிரசித்திபெற்றவை. விசேஷமாக, இவரது தனி ஜெபத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தும் மங்கள வார்த்தைகள், உள்ளம் உடைந்த அநேக மக்களை ஆறுதல்படுத்தியுள்ளது அநேகரை சுகப்படுத்தியிருக்கிறது ஆவிக்குரிய வாழ்வில் தொய்ந்தவர்களை, ஆண்டவரில் துளிர்விடச் செய்திருக்கிறது. இவரது ஊழியத்தின் மூலம் உலகெங்கிலும் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்! ஏராளம்! உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படி, சில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்:

## அற்புதமாய் என் திருமணத்தை நடத்திய தேவன்!




பல வருடங்களுக்கு முன், என் தாயார் திடீரென உடல்நிலை சரியில்லாமல் மரித்துவிட்டார்கள். எங்கள் வீட்டைச் சுற்றியிருந்தவர்கள், "திருமண வயதில் பிள்ளைகள் இருக்கிறது, தாயார் மரித்த பிறகு, பிள்ளைகளுடைய காரியங்கள் எப்படி நடக்கும்? என்று கேலி பேசினார்கள். ஆனால் ஆண்டவர் நன்மையானதை எனக்குத் தருவார். அவர் ஒருநாளும் தீங்கு செய்கிற தேவன் அல்ல என்று நான் விசுவாசத்தோடு இருந்தேன். ஜனவரி 2, 2016 அன்று நடைபெற்ற "அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூட்டத்தில்" நானும், என் சகோதரியும் கலந்துகொண்டோம். தனி ஜெபத்தில் சகோதரரிடம் எனக்காகவும், என் சகோதரிக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் அவர்கள், எங்கள் இருவரின் கரங்களையும் பிடித்து ஜெபித்தார்கள். "மகளே, உன்னுடைய வாழ்வில் அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்" என்று மங்கள வார்த்தை சொன்னார். சகோதரரின் மங்கள வாக்கின்படியே என்னுடைய திருமணம் டிசம்பர் 28, 2016 அன்று அற்புதமாய் நடைபெற்றது. 2017-ஆம் ஆண்டு எனக்கு அழகியதொரு ஆண் குழந்தையையும் ஆண்டவர் கொடுத்தார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு என்னுடைய திருமணத்தை அற்புதமாய் நடத்திக்கொடுத்த தேவனுக்கே மகிமை செலுத்துகிறேன். ஆமென்.

– **ஏஞ்சலின்**, ஸ்ரீபெரும்புத்தூர்

## அற்புத சுகம் தந்த தேவன்!



நான் இந்து குடும்பத்தைச் சேர்ந்தவள். பல வருடங்களுக்கு முன் நான் புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்தேன். ஆரம்ப நாட்களில், நான் புற்று நோயை கவனிக்காமல் இருந்துவிட்டேன். புற்று நோயின் கோரம், வலி தாங்கமுடியாமல், அப்படியே படுத்த படுக்கையாகிவிட்டேன். மருத்துவரிடம் காண்பித்தபோது, இனிமேல் ஒன்றும் செய்ய இயலாது என கைவிட்டுவிட்டார். நான் சகோதரரின் தேவ செய்திகளை தொலைக்காட்சியில் தவறாமல் பார்ப்பேன். தொலைக்காட்சியில் சகோதரர் அவர்கள் உடல்நிலை சரியில்லாதவர்களுக்காக ஜெபித்தபோது நானும் கலந்துகொண்டேன். என்ன ஆச்சரியம்! ஒரு வாரத்திற்குள் எனக்கு எல்லாமே

சுகமாகிவிட்டது. அடுத்த மாதம் மருத்துவரிடம் பரிசோதித்தபோது, புற்றுநோய் இருந்ததற்கான அறிகுறியே இல்லை என ரிப்போர்ட் வந்தது. சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– **காயத்ரி**, சென்னை

## குழந்தை பாக்கியம் கொடுத்த தேவன்!



எனக்குத் திருமணமாகி, 3 வருடங்களாக குழந்தையில்லாமல் இருந்தேன். எவ்வளவோ மருந்துகளை உட்கொண்டும், எந்தவித பிரயோஜனமும் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஐயா அவர்களை நான் நேரில் பார்த்து ஜெபிக்க விரும்பினேன். கடந்த வருடம் ஐயா அவர்கள் தொலைபேசியில் ஜெபிக்க வரும்படி அழைத்தார்கள். நாங்கள் குடும்பமாக அவர்களைப் பார்த்து ஜெபம் செய்தோம். என்ன ஆச்சரியம்! அந்த மாதமே என்னுடைய மனைவியின் கர்ப்பத்தை ஆண்டவர் ஆசீர்வதித்தார். சரியான நேரத்தில் என் மனைவி பூரண வளர்ச்சியுள்ள ஆண் குழந்தையை பெற்றெடுக்க கிருபை செய்தார். ஐயாவின் ஜெபத்தைக் கேட்டு, எங்கள் குடும்ப வாழ்வில் அற்புதம் செய்த தேவனுக்கே நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக.

– **ஜெரி ஜான்சன்**, கடலூர்

## கட்டுகள் உடைந்து, பிரிந்த குடும்பம் இணைந்தது!



என் மகள் திருமணம் முடிந்து 2 மாதங்களுக்குள் தன் கணவரைவிட்டு பிரிந்துவிட்டாள். என் மருமகனின் குடும்பத்தார், அவர்கள் இணைந்து வாழாதபடி பில்லிசூனியம் செய்தார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நானும், என் மகளும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்தில் கலந்துகொண்டோம். ஜெப வேளையில், என் மகளுடைய தலையில் ஐயா அவர்கள் கைவைத்து, குடும்ப வாழ்விலுள்ள கட்டை உடைத்து ஜெபம் செய்தார்கள். என்ன ஆச்சரியம்! உடனே என் மருமகன் என் மகளோடு தொலைபேசியில் பேசினார். ஓரிரு வாரங்களுக்குள் அவர்கள் குடும்பமாக பெங்களூர் சென்று, ஆசீர்வாதமாய் இருக்கிறார்கள். ஐயாவின் ஜெபத்தைக் கேட்டு என் மகளின் வாழ்வில் அற்புதம் நடப்பித்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறேன்.

– **பாரதி**, கே.ஜி.எப், கர்நாடகா

## புற்றுநோய் குணமானது!



பல வருடங்களுக்கு முன் நான் கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு, எலும்பும், தோலுமாக மாறிவிட்டேன். என்னை பரிசோதித்த மருத்துவர், இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று கைவிட்டுவிட்டார். என்னுடைய வியாதிக்காக ஒவ்வொரு நாளும் தேவனின் அன்பு ஜெப கோபுரத்தோடு ஜெபித்துக்கொண்டேன். ஒரு முறை சகோதரர் T. ஸ்டீபன் அவர்களை நேரில் பார்த்து ஜெபிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. புற்று நோயினால் நான் மரித்துவிடுவேன் என்று பயமாக இருக்கிறது என்று அவர்களிடம் தெரிவித்தேன். சகோதரர் அவர்கள், "கர்த்தர் உனக்கு விடுதலை கொடுத்துவிட்டார். நீ சுகமாகிவிட்டாய்" என்று மங்கள வார்த்தை சொன்னார். என்ன ஆச்சரியம்! சில நாட்கள் கழித்து, மருத்துவரிடம் பரிசோதனை செய்தபோது, நான் புற்று நோயிலிருந்து பூரண சுகமடைந்துவிட்டதாக கூறினார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு எனக்கு பூரண சுகம் கொடுத்த தேவனுக்கே நன்றிசெலுத்துகிறேன்.

– **ஹன்ரீட்டா**, சென்னை

## குழந்தை பாக்கியம் கிடைத்தது!



பல வருடங்களுக்கு முன்பாக நான் “அன்பரின் பாதத்தில் ஒருநாள்” கூட்டத்திற்கு வந்திருந்தேன். சகோதரர் தனி ஜெபத்தில், “உன் மனவிருப்பத்தின்படி ஆண்டவர் உனக்குத் தந்தருள்வார். உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்” என்று மங்கள வார்த்தை சொல்லி ஆசீர்வதித்தார்கள். முடிவு ஜெபத்தில் யாருக்கெல்லாம் குழந்தை வேண்டுமோ, அவர்கள் தங்கள் கரத்தை வயிற்றில் வைத்து, ஜெபியுங்கள் என்றார். நானும் விசுவாசத்தோடு என்னுடைய வயிற்றில் கைவைத்து ஜெபித்தேன். என்ன ஆச்சரியம்! அந்த மாதம் இறுதியில் மருத்துவமனையில் சென்று பரிசோதித்தபோது, மருத்துவர்கள் கர்ப்பமடைந் துள்ளதை உறுதிசெய்தார்கள்.

அற்புதம் செய்த ஆண்டவருக்கும், ஜெபித்த சகோதரருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். ஆண்டவருடைய நாமம் மகிமைப்படுவதாக!

– **ஏஞ்சலின் திவ்யா**, செங்கல்பட்டு



# மார்வெல் திருமண

# தகவல் மையம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,
இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

திருமணம் என்பது பரலோகத்திலே நிச்சயிக்கப்பட வேண்டியது. ஆதாம் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட ஆண்டவர், ஏற்ற துணையாக ஏவாளை உண்டுபண்ணினார் (ஆதியாகமம் 2:18,21,22). இன்றைக்கும் மணமகனுக்கு ஏற்ற மணவாட்டியை தெரிந்தெடுப்பது ஆண்டவருக்கு முன்பாகவும், அவரது வசனத்திற்கு முன்பாகவும் நேர்த்தியானதாக, அருமையானதாக இருக்கும்!

எனவே ஆண்டவருடைய பாதத்திலே ஜெபித்து, உங்கள் வசதிக்காக, மார்வெல் திருமண தகவல் மையத்தை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கிறோம். நீங்களும், உங்கள் பிள்ளைகளுக்கு / உறவினர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளை ஜெபித்து, தெரிந்தெடுக்க வசதியாக, இந்த மார்வெல் திருமண தகவல் மையத்தில், அவர்களுடைய பெயர்களை பதிவு செய்யலாம். ஆகவே, ஜெபத்தோடு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். கர்த்தருக்குச் சித்தமானது அவரது கரத்தினாலே உங்களுக்கு வாய்க்கும் (ஏசாயா 53:10). மகிமையான நல்விசேஷங்கள் உங்கள் குடும்பத்திலே வசனிக்கப்படும் பேசப்படும் (சங்கீதம் 87:3).

மேலும் விபரங்களுக்கு **7824855999** என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது எங்களது சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை நகரத்திலுள்ள ஜெப கோபுரங்களுக்கு நேரடியாக சென்று பதிவுசெய்துகொள்ளலாம்.

## சென்னை

எண்.14, ராமலிங்க நகர்,
OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில்
கொட்டிவாக்கம்,
சென்னை - 600 041

**7824855999**

## மும்பை

எண்.L-411,, டிரீம்ஸ்-தி-மால்,
எல்.பி.எஸ். மார்க், சாகர் விகார்
அருகில், பாண்டுப் மேற்கு,
மும்பை - 400 078

**9930737999**

## நாகர்கோவில்

பாக்கியம் திருமண மண்டப வளாகம்,
எண்: 177, WCC ரோடு, YWCA
எதிர்புறம், நாகர்கோவில் - 629 001

**9884480999**



**info@marvelmatrimony.com**

**www.marvelmatrimony.com**





# தாழ்மையின் பரிசு

சகோதரி. ஸ்டெஃபி ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

ஹாய் பிரண்ஸ் / குட்டீஸ்,

நல்ல இருக்கீங்களா? இந்த கிறிஸ்துமஸ் மாதத்திலும் உங்கள் எல்லாரையும் சந்திப்பதிலே எனக்கு மிக்க மகிழ்ச்சி. கிறிஸ்துமஸ் வந்துவிட்டாலே சிறியவர் முதல் பெரியவர் வரையிலும் அனைவருக்கும் மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் தான்!

## தாழ்மையின் ரூபமாய் பிறந்த இயேசு:

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாம் திரும்பிப் பார்ப்போமேயானால், எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல், எளிய சூழ்நிலையில், சத்திரத்தில் கூட இடமில்லாமல் ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் ரூபமாய் இயேசு கிறிஸ்து இந்த உலகில் பிறந்தார்! (லூக்கா 2:7). ஆம், இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் ஒரு, எளிமை, தாழ்மை இருந்தது! தாழ்மை என்றால் நாம் அவமானம் என்று நினைக்கிறோம். நம்மை உயர்த்த, நம்மை சந்தோஷமாக வாழ வைக்க, சிலுவைபரியந்தம் தம்மை தாழ்த்திய, நம் ஆண்டவரின் பிறப்பே ஒரு அதிசயம்தான் (பிலிப்பியர் 2:8). அவர் ஏழைக்கோலமாய், மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் (லூக்கா 2:10,11).

சிறு பிள்ளைகளாகிய நாமும், நமக்கு முன்மாதிரியாக (Role Model) இயேசுவை எடுத்துக் கொள்ள வேண்டும். நம்மிடத்தில் ஒரு நாளும் பெருமை இருக்கவே கூடாது. தாழ்மை என்ற குணாதிசயம் சிறு வயது முதலே காணப்படட்டும். வீண் பெருமையை விட்டு விலகி, ஆண்டவரில் நிலைத்திருப்போம்! வேதம் சொல்லுகிறது:

**"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்"(யாக்கோபு 4:6).**

பெருமையுள்ளவனைப் பார்க்கிலும், பொறுமையுள்ளவன் உத்தமன் (பிரசங்கி 7:8). இதை சிறு பிள்ளைகளாகிய நாம் இறுகப் பிடித்து, ஜெபிப்போம். கிறிஸ்து பிறப்பை உற்சாகமாய் கொண்டாடுவோம்!

## தாழ்மையின் பரிசு:

உங்களுக்கு ஒரு அருமையான குட்டிக் கதையை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஊரில் அருமையான குடும்பம் ஒன்று இருந்தது. கணவர் பெயர் நிக், மனைவி பெயர் ஜாஸ்மின். கணவரின் தாயர் பெயர் சாரா (மாமி). இந்த சிறிய குடும்பத்தில்

கணவர் நிக், மனைவி ஜாஸ்மினை நன்றாக நேசித்து, இருவரும் சந்தோஷமாக வாழ்ந்தனர். ஆனால் மாமி சாராவுக்கோ, இந்த ஜாஸ்மினை பிடிக்காது. அவள் எது செய்தாலும், அதை குறை கண்டுபிடிப்பது, திட்டுவது, கணவரிடம் கோள் மூட்டுவது. இதையே வேலையாக கொண் டிருந்தார்கள். ஆனால் ஜாஸ்மின் எதையும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. அவர்கள் நம்மைவிட பெரியவர்கள், தன் கணவரின் அம்மா என்ற மரியாதையோடு, தன் கணவரிடம் எதையும் சொல்லாமல், எல்லாவற்றையும் பொறுமையாக சகித்து, தாழ்ந்தே போய்க்கொண்டிருந்தார்கள்.



ஒரு நாள் அம்மா, ஜாஸ்மினை திட்டுவதை மகன் நேரடியாக பார்த்துவிட்டார். தன் மனைவி எந்த பதிலும் பேசாமல் அமைதியாய் இருப்பதைப் பார்த்து, நிக்கின் மனம் வேதனை அடைந்தது. உடனே தன் மனைவியை அழைத்து, அவள் கண்ணீரை துடைத்துவிட்டு, "நான் ஒரு காரியத்தை சொல்லுகிறேன். அதை நீ செய்து, அம்மாவுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும்" என நிக் கூறினான். உடனே அம்மாவையும், ஜாஸ்மினையும் அழைத்து, இருவரிடமும் எனக்கு ஓரிரு நாட்களில் பிறந்தநாள் வருகிறது. எனவே, நீங்கள் இருவரும் எனக்காக வீட்டிலேயே கேக் செய்ய வேண்டும். யார் நன்றாக செய்கிறார்களோ அவர்களுக்கு நான் ஒரு விலையுயர்ந்த பரிசு ஒன்றை அளிப்பதாகக் கூறினான்.

இதைப் பார்த்த மருமகள் ஜாஸ்மின் தன் மாமியாரின் அருகில் வந்து, "மாமி கவலைப் படாதீர்கள். நான் செய்த கேக்கை உங்கள் மகனிடம் கொடுத்து, பிறந்த நாள் கேக் கட்பண்ண சொல்லுங்கள்" என்று கூறினாள். இதை கேட்டதும் மாமி சாராவின் மனம் கலங்கியது. ஜாஸ்மின் இப்படி, என்னிடம் பாசமாக இருப்பாள் என்று கனவில் கூட நான் நினைக்கவில்லை. நான் தான் அவளுடைய நல்ல மனதை சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று மருமகளை கட்டித்தழுவினாள். இதைப் பார்த்த மகன் நிக், மிகுந்த சந்தோஷமடைந்தான். சந்தோஷத் தோடு தனது பிறந்தநாளை கொண்டாடினான்.

## தாழ்மையை தரித்துக்கொள்வோம்:

ஆம் இயேசுவும் உங்கள் பொறுமையை, உங்கள் தாழ்மையை கண்ணோக்கிப் பார்க்கிறார் (சங்கீதம் 138:6; நீதி. 3:34). ஜாஸ்மினுடைய தாழ்மையான குணம், மறுபடியும் அவர்கள் குடும்பம் சந்தோஷமாய் வாழ, வழி செய்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, தாழ்மையை தரித்துக்கொள்ளுங்கள் (1 பேதுரு 5:5). உங்களுக்;கு இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் அநேக வெகுமதிகள் கிடைத்தால், அதை இல்லாதவர்களுக்குக் கொடுத்து, மகிழுங்கள். உணவு இல்லாத ஏழை பிள்ளைகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யுங்கள். உங்களைப் போல் பிறரை நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள். பெருமையை விட்டு விலகி, தாழ்மையாக வாழ பழகிக்கொள்ளுங்கள். அப்போது தான் இயேசு உங்களில் பிரியப்படுவார்! இதை மனதில் ஏற்று, நாம் ஒவ்வொருவரும் இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடுவோமா!

**I wish you all a Merry Christmas and a Prosperous New Year 2021.**

## ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, சிறு பிள்ளைகள் ஒவ்வொரு வரையும் இந்த கிறிஸ்துமஸ் காலங்களிலே அணைத்து முத்தமிடும். அவர்கள் ஒவ்வொருவரும் சிறு வயதிலிருந்தே உம்மைப் போல தாழ்மையை தரித்துக்கொள்ள கிருபை தாரும். இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையை தங்கள் பெற்றோரோடு இணைந்து சந்தோஷமாக கொண்டாடவும், பிறருக்கு உதவி செய்து வாழவும் அவர்களுக்கு அருள் புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்



வாலிபர் பகுதி

# நீங்கள் ஆண்டவருக்குப் பிரியமானவர்கள்

சகோதரி. பவ்யா டெரில்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

அன்பான வாலிப தம்பி, தங்கைகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்களை மீண்டும் இந்த புதிய கிறிஸ்துமஸ் மாதத்தலே சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கடந்த மாதம் முழுவதும் நாம் பல்வேறுவிதமான போராட்டங்களோடு இருந்தாலும், தேவன் நம்மையும், நம் குடும்பத்தையும் அற்புதமாய் பாதுகாத்து நடத்தி வந்துள்ளார். அதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம் (சங்கீதம் 103:1,2).

ஆண்டவருடைய பெரிய கிருபையினாலும், அவருடைய வழிநடத்துதலினாலும் இந்த பொது முடக்க நாட்களில், அநேக நாட்களை நமது சொந்த குடும்பத்தோடு செலவிட தேவன் உதவிசெய்தார்! இந்த பொது முடக்க காலங்களில் நாம் கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளாக வாழ்ந்தோமா? அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்தோமா? என்பதை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

**"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்கா 2:14).**

மகிமையின் தேவன் இந்த பூமியில் வந்ததன் நோக்கமே, நமக்கு மீட்பையும், சமாதானத்தைக் கொடுப்பதற்காக. இந்த கொடிய உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாம், மனிதனை பிரியப்படுத்துகிறோமோ இல்லையோ ஆண்டவருக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ வேண்டும். இந்த பொதுமுடக்க நாட்களிலே அநேக நேரம் நமக்கு இருந்தது. யாரும் எனக்கு நேரம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. இந்த நாட்களில் நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து, பிறரை குற்றப்படுத்துகிற, காயப்படுத்துகிற தீயசெயல்களை நம்மைவிட்டகற்றி, ஆண்டவரே, "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக" (சங்கீதம் 143:10) என்ற சங்கீதக்காரனின் அறிக்கையை நாமும் ஏற்று, அதன்படி செய்தோமா? இல்லை. அப்படிச் செய்து ஆண்டவருக்குப் பிரியமான பிள்ளையாக நாம் வாழும்போது, நம்முடைய வாழ்வில் தானாக உயர்வுகளை பார்க்க முடியும்!

ஒரு உண்மைச் சம்பவத்தை, லூக்கா 15-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். கெட்ட குமாரன் தன் தகப்பனுடைய சொத்தை பிரித்து, வாங்கி, தூர தேசம் போய் மனம்போல வாழ்ந்தான். அவன் பஞ்சத்தில் சிக்கி, சாப்பிட உணவில்லாமல், பன்றிகள் சாப்பிடுகிற தவிட்டை சாப்பிட ஆசையாய் இருந்தான். ஆனால் அதுவும் அவனுக்குக் கிடைக்காமல் போயிற்று! காரணம் என்ன? பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல், பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்ததுதான்! அவனுடைய தகப்பன் வீட்டில் போதிய வசதி இருந்தும், சாப்பாட்டுக்கு கூட திண்டாடுகிற நிலைமை. அவன் ஒரு நாள் உணர்வடைந்து, தன் தகப்பனிடத்தில் வந்தான். தகப்பனோ, பழையவற்றை மறந்து தன் மகனை அணைத்து, முத்தமிட்டு கொண்டாடுகின்றான். என்னே தகப்பனுடைய அன்பு பாருங்கள்! அதுபோல தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும். நீ எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் உன் பாவங்களை மன்னித்து, உனக்கு இரக்கம் செய்கிறவராய் இருக்கிறார் (நீதிமொழிகள் 28:13). அதற்காகத்தான் ஆண்டவர் இந்த உலகில் வந்தார்.

கிறிஸ்து பிறந்த தினத்தைக் கொண்டாடும் நாம், நம்மை இரட்சிக்கும்படி, நம்மை மீட்கும்படி நமக்காக இந்த உலகிற்கு வந்த ஆண்டவரை எப்படி பிரியப்படுத்தி வாழவேண்டும் என்பதை சுருக்கமாக பார்ப்போம்:

## 1. நீங்கள் பரிசுத்தராயிருங்கள்

**"உங்களை அழைத்தவர் பரிசுத்தராகி யிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கை களெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேதுரு 1:15).**

ஆம், கிறிஸ்து பிறப்பை கொண்டாடுகிற நாம், நம்முடைய தேவன் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நாமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். பவுலடிகளார் ரோமர் 12:1-ல் சொல்லுகிறபடி, உங்கள் சரீரங்களை, பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுங்கள். அப்பொழுது கிறிஸ்து உங்களில் பிரியப்படுவார். நீங்கள் உண்மையிலேயே ஆண்டவரை நேசிக்கிறீர்கள் என்றால், அவருக்குப் பிரியமில்லாத காரியங்களையெல்லாம் முதலாவது உங்களைவிட்டு எடுத்துப்போடுங்கள். இந்த டிசம்பர் மாதத்திலாவது நாம் ஒரு நல்ல முடிவை எடுப்போம்! பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோகட்டும். நமது வாழ்வில் எல்லாம் புதிதாகட்டும் (2 கொரிந்தியர் 5:17). கிறிஸ்து நம்முடைய உள்ளத்தில் பிறந்து, நம்மை மகிழ்விக்கட்டும்! அல்லேலூயா.

## 2. உள்ளான மனிதனில் பெலப்படுங்கள்

**"நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுங்கள்..." (எபேசியர் 3:16).**

என்ற பவுலடிகளாரின் கூற்றுப்படி, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் ஆவிக்குரிய வாழ்வில் உள்ளான மனிதனில் பெலப்படுவோம். உலகப்பிரகாரமான வெளி அலங்காரத்தைவிட, உள்ளான மனிதன் நம்முடைய வாழ்வில் எப்படி இருக்கிறான் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களுக்கு நம்மை விலக்கி, ஒவ்வொரு நாளும் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைந்து உள்ளான மனிதனில் பெலப்பட வேண்டும். நம்முடைய இருதயம் கறைபடாமல், நம்மில் காணப்படக்கூடிய கோபம், எரிச்சல், பொறாமை, வன்கண் இவற்றைக் களைந்துவிட்டு, ஆவிக்குரிய வாழ்வில் ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் தரித்திருந்து, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைந்து, நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்வரை குற்றமற்றதாயிருக்கும்படி பரிசுத்தமாய் காத்துக்கொள்ளுவோம் (1 தெசலோனிக்கேயர் 5:23). ஆம், நாம் ஒவ்வொருவரும் உள்ளான மனிதனில் பெலப்படுவோம்! கிறிஸ்து பிறப்பை கொண்டாடுவோம்!

இதை வாசிக்கிற எனக்கன்பான வாலிப தம்பி, தங்கைகளே, இன்றைக்கு உங்கள் நிலை என்ன? இந்த கிறிஸ்துமஸ் தினத்திலிருந்தாவது நீங்கள் அவருக்குப் பிரியமாக, பரிசுத்தமாக வாழ முயற்சி எடுங்கள். உங்கள் சரீரத்தை பரிசுத்தமும், பிழையற்றதுமாக காத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் உள்ளான மனிதனில் பெலப்படுங்கள்! அதுதான் உண்மையான கிறிஸ்துமஸ். ஆண்டவர் இந்த பூமியில் பிறந்ததின் நோக்கமும் அதுதான்! இப்படி ஒவ்வொரு வருடமும் நீங்கள் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை கொண்டாடு முன், உங்களை அலசி ஆராய்ந்து, அனுசரிக்க வேண்டும்! செய்வீர்களா?

**I wish you all a Merry Christmas and a Prosperous New Year 2021.**

## ஜெபம்

அன்பின் ஆண்டவரே, இதை வாசிக்கிற வாலிப பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்கள் உள்ளான மனிதனில் பெலப்படவும், தங்கள் சரீரங்களை பரிசுத்தமும், பிழையற்றதுமாக காத்துக்கொள்ளவும், கிருபை தாரும். இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் அவர்கள் ஒவ்வொருவரும் உமக்குப் பிரியமாய் வாழ்ந்து, உம்முடைய சித்தத்தை மட்டும் செய்து, உம்மை மட்டும் நோக்கிப் பார்த்து, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

# தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

## தினந்தோறும்

கீழ்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

### நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை

Satellite Channel - SCV 757, Airtel 817, Tata Sky 1592, Videocon 578, TCCL 743, Sun Direct 611, Polimer TV 726, Aadhar 879, Akshaya cable 606, Arasu Cable 600, Jio 4G Mobile Service Provider

### அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை

Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | Nagai & Theni - SCV 332 | Singapore Malasiya & Worldwide - BeeipTv 227 | USA, Canada & England - Starone IPTv 1426 Android smart TV

### ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை

Tamilnadu - TCCL 729, Polimer VK Digital 715 | Kanyakumari - SCV 214, AMN Digital Network 812

### ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை

Kanniyakumari Dist - SCV 223, VK Digital 223, TCCL 182

### ஜீசஸ் டிவியில் தினமும் காலை 8.30 முதல் 9.00 வரை

Kanniyakumari - TCCL 181 | Airtel XStream Set top box

### கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை

Tamilnadu - TCCL 734

### நித்யம் டிவியில் தினமும் இரவு 9.30 முதல் 10.00 வரை

Tamilnadu, Andhra, Karnataka, Singapore, Malasiya, Canada, USA, UK, Australia
TCCL 728 I Aadhar 528 I Apple 528 I Amn 728

### வாணி டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை மற்றும் இரவு 8.00 முதல் 8.30 வரை

Tirunelveli & Tenkaasi - JAK Digital 120

### ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை

Chennai - Crystal 160



# வாரந்தோறும்

## ஞாயிறுதோறும்

**Angel TV:** 12.00 AM – 12.30 AM, Satellite Channel

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 1.30 PM – 2.00 PM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

## திங்கள்தோறும்

**Angel TV:** 5.00 AM – 5.30 AM, Satellite Channel

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM | 1.30 PM – 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

**உங்கள் நம்பிக்கை Television:** 7.30 AM – 8.00 AM, Satellite Channel

## செவ்வாய்தோறும்

**Angel TV:** 5.00 AM – 5.30 AM | 9.00 PM – 9.30 PM, Satellite Channel

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM | 1.30 PM – 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,
VK Digital 117, Digcon 85,

## புதன்தோறும்

**Angel TV:** 8.00 AM – 8.30 AM, Satellite Channel

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM | 1.30 PM – 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

## வியாழன்தோறும்

**ஹெவன் HEAVEN TV INDIA:** 8.30 PM – 9.00 PM, TamilNadu

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 1.30 PM – 2.00 PM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

**Subhavaartha Television:** 7.30 AM – 8.00 AM, Satellite Channel

## வெள்ளிதோறும்

**Angel TV:** 8.00 AM – 8.30 AM, Satellite Channel

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 1.30 PM – 2.00 PM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

## சனிதோறும்

**King & Glory:** 7.30 PM – 8.00 PM, Pondicherry

**Living Jesus Tv:** 7.30 AM – 8.00 AM | 1.30 PM – 2.00 PM | 8.30 PM – 9.00 PM | 10.30 PM – 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

**ANGEL TV DETAILS ( Satellite Channel )**

**SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815**




அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில்
**அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். – மத்தேயு 1:21**



# 2021 தமிழ் காலண்டர்

2021-ஆம் ஆண்டின் அனுதின வாக்குத்தத்த வசனங்களுடன் எங்கள் ஊழியத்தின் அனைத்து நிகழ்வுகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி விபரங்கள் அடங்கிய தமிழ் காலண்டர் உங்களுக்காக தயாராக இருக்கிறது.

எங்களது சென்னை, மும்பை மற்றும் நாகர்கோவில் கிளை **அலுவலகங்களில்** / **ஜெப கோபுரங்களில் நேரடியாக சென்று பெற்றுக்கொள்ளலாம்**

**கைபேசி** மற்றும் **தொலைபேசி, வாட்ஸ்அப்** மூலம் ஆர்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் கைபேசி எண்கள்: **97107 44999 / 98410 40999**

**கடிதம்** மற்றும் **மின்னஞ்சல்**(Email) மூலம் தெரியப்படுத்தி பெற்றுக்கொள்ளலாம். **Prayer@godsloveministries.co.in**

**ஆன்லைன்** மூலமும் ஆர்டர் செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் இணையதள முகவரி: **www.godsloveministries.co.in**

**மணியார்டர்** "தேவனின் அன்பு ஊழியங்கள்" சென்னை முகவரிக்கு அனுப்பி, பெற்றுக் கொள்ளலாம் (காலண்டர் நன்கொடை என்று மணியார்டரில் குறிப்பிடவும்)

**இந்தியா**
நேரில் / தபாலில்
நன்கொடை
**₹100/-**

**வெளிநாடு**
ஒரு காலண்டர்
**$2 USD**
தபால் செலவு தனி*



சென்னை / 044-24547999
நாகர்கோவில் / 9884480999
மும்பை / 9930737999

எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை - 600 041
பாக்கியம் திருமண மண்டப வளாகம், எண்: 177, WCC ரோடு, YWCA எதிர்புறம், நாகர்கோவில் - 629 001
எண்.L-411, டிரீம்ஸ்-தி-மால், எல்.பி.எஸ். மார்க், சாகர் விகார் அருகில், பாண்டுப் மேற்கு, மும்பை - 400 078

# எங்கள் சேவைகள்




## 24X7 மணி நேர ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

**044 2454 7999**
**99419 50999**

## மின்னஞ்சல் ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளை சகோ.T.ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து பதில்களைப் பெற:

**prayer@godsloveministries.co.in**

**சமூக வலைத்தளம்:**

**Evg.T.Stephen**

**9841040999**


Owned, Edited and Published by **Sis.Josephin Stephen**

**தேவனின் அன்பு ஊழியங்கள்**

எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில் கொட்டிவாக்கம், சென்னை – 600 041
தொலைபேசி: +91 44 2454 7999 / 99419 50999
prayer@godsloveministries.co.in www.godsloveministries.co.in